ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,903—1970 අප්‍රේල් 24 වැනි සිකුරාදා—1970.4.24

14,903 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 147 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 148 |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | 149 |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 149 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆவது பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 3.4.1970.

#### கட்டளை

1969 சனவரி 9 ந் திகதிய 14,835/7 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்ட வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்து சிங்களப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள சிங்களப் பற்றுக் கிராமப் பிரதேசத்தை மின்னேரியா, கிரித்தலே, மெதிரிகிரிய ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களாகப் பிரிவினை செய்வதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதனோடுள்ள அட்டவணையில் குறித்துள்ள விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகிறது.

#### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பின்னுரித்தாளியாக இருக்கும்.

2. 1969 யூன் 30 ல் நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட சகல துணைவிதிகளும், 1969 யூலை 1 லிருந்து ஒவ்வொரு கிராமப் பிரதேசத்திலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டியதுடன் அவை அந்தப் புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளினால் ஆக்கப்பட்டனவாகவும் கருதப்படல் வேண்டும்.

3. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலிருக்கும் பணத்தொகை 1969 யூலை 1 ல் 7 : 3 : 6 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்பட்டு மின்னேரியா கிரித்தலே, மெதிரிகிரிய ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களினது கிராமச் சபைகளின் சமுதாய நிதிகளில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

4. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த காணி, கட்டிடம் அல்லது வேறு நிலையான சொத்து ஒவ்வொன்றும் 1969 யூலை 1 லிருந்து எப்புதிய கிராமப் பிரதேசத்துக்குள் அக்காணி, கட்டிடம் அல்லது வேறு நிலையான சொத்து அமைந்திருக்கின்றனவோ அக்கிராமச் சபைக்கு உரிமையாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

5. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குரிய உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் ஆகியாவும் அவை புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்டவரையில் 1969 யூலை 1 லிருந்து அந்தந்தப் புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு மாற்றப்பட்டிருப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆடு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

எனினும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு முன்னுள் எழுதுவினைஞர் திரு. பி. பீ. ஹெரத்திடமிருந்து வரவேண்டிய 7,077 ரூபா 14 சதங்களைக் கொண்ட கடன் 1969 யூலை 1 லிருந்து புதிய மின்னேரியாக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

6. (i) சிங்களப்பற்றுக் கிராமச் சபையினால் தொடரப்பட்டு குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் 2929/எம் ஆவது இலக்க வழக்கின் சட்ட நடவடிக்கைகள் மின்னேரியாக் கிராமச் சபைக்குச் சாட்டுதல் செய்யப்பட்டிருப்பதோடு சொல்லப்பட்ட சிங்களப் பற்றுக் கிராமச் சபையினது பின்னுரித்தாளியென்ற முறையில் மின்னேரியாக் கிராமச் சபையினால் தொடர்ந்து நடாத்தவும் படலாம்.

(ii) பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தினால் குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தின் 621 ஆம் இலக்க வழக்கில் சிங்களப்பற்றுக் கிராமச் சபைக்குச் சாதகமாக அளிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது கட்டளை மின்னேரியாக் கிராமச் சபைக்குச் சாதகமாக அளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

7. பழைய கிராமச் சபையில் சேவை செய்திருக்கும் அதன் ஊழியர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளங்கள் வழங்குவதன்பேரிலான உதவு தொகைகள் சம்பந்தமான அச்சபையின் பொறுப்பு மின்னேரியா, கிரித்தலே, மெதிரிகிரிய ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளிடையே 7 : 3 : 6 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

8. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பணிமனையில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றின் கோப்புகள் அனைத்தும் அவை புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்டவரையில் 1969 யூலை 1 லிருந்து அந்தந்தப் புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளுக்கு மாற்றப்படல் வேண்டும்.

9. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி 1969 சனவரி 9 ந் திகதிய 14,835/7 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளில் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான மின்னேரியா, கிரித்தலே, மெதிரிகிரிய ஆகிய கிராமப் பிரதேசங்களைக் குறிக்கும்.

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது புதிய கிராமப் பிரதேசங்களாக வருவதற்கு முன்பிருந்த சிங்களப்பற்றுக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

4—752—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஃ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.
(உள்ளூராட்சி சபைகள்).

கொழும்பு,
ஏப்பிறல் 10, 1970.

அட்டவணை

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | கொழும்பு மாவட்டம் |
| | **கடுவெல கிராமச் சபை** |
| 5 .. | கட்டுகம்பொலகே டொன் ஹெந்திரிக் அப்புகாமி |
| | **கேரகல கிராமச் சபை** |
| 12 .. | குணரத்ன ஆரச்சிகே டொன் அபயவர்தன குணரத்ன |
| | களுத்துறை மாவட்டம் |
| | **ஹொறணை நகர சபை** |
| 7 .. | கரதன ஆசாரிகே பியசேன பெரேரா |
| | **முன்வத்தபாகே பத்து மேற்கு கிராமச் சபை** |
| 12 .. | கமலத்கே டொன் வெலிங்டன் ஜயசிறி கருணதிலக |
| | கண்டி மாவட்டம் |
| | **(தும்பனே) பள்ளே பலாத கிராமச் சபை** |
| 5 .. | தசநாயக முதியன்சேலாகே புஞ்சிபண்டா தசநாயக |
| | **(பாததும்பர) பலிஸ்பத்து மேற்கு கிராமச் சபை** |
| 11 .. | அபசின் முதியன்செல முதியன்செ |
| | **(ஹரிஸ்பத்து) களுகம்மனசியாபத்து கிராமச் சபை** |
| 24 . | வைத்தியதிலக நவரத்ன முதலிகே வெதகெதர தந்தசிங்க |

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | கண்டி மாவட்டம் |
| | **(உடபலாத) கங்க பஹால கிராமச் சபை** |
| 12 .. | திக்கிரி பண்டா துனுகார |
| | **(மெததும்பர) மெதசியபத்து கிராமச் சபை** |
| 2 .. | ஏகநாயக முதியன்செலாகே அஸ்ஸெத்துமெ கெதர புஞ்சி பண்டா |
| | மாத்தளை மாவட்டம் |
| | **இனமலுவ கோறலே கிராமச் சபை** |
| 7 .. | மில்லகஹாகெதர பய்யா |
| | காலி மாவட்டம் |
| | **பத்தேகம கிராமச் சபை** |
| 10 .. | பெல்பொல லொக்குலியனகே தர்மதாச அல்விஸ் |
| | அம்பாரை மாவட்டம் |
| | **கரவாகு தெற்கு கிராமச் சபை** |
| 8 .. | இப்ராலெப்பெ உதுமான்கண்டு |
| | திருகோணமலை மாவட்டம் |
| | **சாம்பல்தீவு கிராமச் சபை** |
| 5 .. | செல்லையா சின்னதம்பி |
| | புத்தளம் மாவட்டம் |
| | **கற்பிட்டி கிராமச் சபை** |
| 4 .. | மொகம்மது நஜிமுதீன் ஹமீது |
| | பதுளை மாவட்டம் |
| | **தம்பவின்ன கிராமச் சபை** |
| 5 .. | விலெகொட லியனகே குணசேகர |
| | **ஏத்தாம்பிட்டிய கிராமச் சபை** |
| 6 .. | தென்னகோன் முதியன்செலாகே கிரிபண்டா |

4—808—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

# வரவு செலவுத் திட்டங்கள்

## கிளிநொச்சிப் பட்டண சபை

### பட்டண சபைகள் நிதிப்பிரமாணம் 40 (ii) கீழ் நான்காவது விண்ணப்பம்—வரவு செலவுத்திட்டம், 1969

இங்கு காட்டப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் ஒதுக்கிய வாக்குப்பணத்திலிருந்து பின்வருமாறு சேமித்த தொகையைத் தொடர்பான மற்றைய வாக்குகளில் தேவைப்படும் மேலதிகத் தொகையை பின்வரும் கிரமப்படி ஈடு செய்தற்பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தீர்மான இல. 7 (ஆ), திகதி 29.12.69.

பகுதி 2

| சேமிப்பு | மின்னியல் பகுதி ரூ. ச. | மேலதிகச் செலவு | ரூ. ச. |
|---|---|---|---|
| 6. விஸ்தரிப்புகளும் திருத் தங்களும் | 5,000 0 | 1. மின்சார உற்பத்தி (ஈ) மின்சக்தி கொள் வனவு | 5,000 0 |

பட்டண சபை அலுவலகம்,
கிளிநொச்சி,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 29 ந் உ.

க. ச. கந்தையா,
தலைவர்,
பட்டண சபை, கிளிநொச்சி.

அனுமதிக்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 16 ந் உ.

எ. எ. ஜோசப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

4–825—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903.

# நானாவித அறிவித்தல்கள்

## 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க தலதாபனங்கள் நிலையான உபவிதிகள் பற்றிய சட்டம்

தலதாபனங்கள் (நிலையான உபவிதிகள்) பற்றிய சட்டம் (அத்தியாயம் 261) இன் 3 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளைப் பற்று, ஓட்டமாவடி கிராமப்பகுதியின் கிராமச்சபையால் நிறைவேற்றப் பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசித்தப் படுத்தப்படுகிறது.

### தீர்மானம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளைப்பற்று, ஓட்டமாவடி கிராமச் சபை தலதாபனங்கள் (நிலையான உபவிதிகள்) பற்றிய சட்டம் (அத்தியாயம் 261) இன் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசித்தப்படுத்தப்படும் திகதியிலிருந்து ;

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 10.4.1953 ம் திகதிய 10,517 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் செனற் சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1953 ம் ஆண்டு ஆவணி மாதம் 7 திகதி வெளியான 10,560 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டதுமான நிலையான உபவிதிகள் 1–37 பாகங்களையும் 21.6.1963 ம் திகதிய 13,679 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் செனற் சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 8.1.65 ம் திகதி வெளியான 14,287 ம் இலக்க வர்த்தமானப் பத்திகையில் அறிவிக்கப்பட்டதுமான அதே நிலையான உபவிதிகளின் 38 ம் பாகத்தையும்.

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 8.7.1966 ம் திகதிய 14,703 ம் இலக்க வர்த்தமானப் பத்திகையில் வெளியிடப்பட்டதும் செனற் சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 3.1.1969 ம் திகதி வெளியான 14,835 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டதுமான அதே நிலையான உபவிதிகளின் 39, 40, 41 ம் பாகங்களையும் ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவருவதென்று இத்தால் தீர்மானிக்கின்றது.

உ. முகம்மது சரிபு, ஜே. பீ.,
தலைவர்,
கிராமசபை, ஓட்டமாவடி.

கிராமசபை அலுவலகம்,
ஓட்டமாவடி.
திகதி : 6.11.69.

4–821—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.